**தலைப்பு 217 – நன்னடத்தை, சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 217 – நன்னடத்தை, சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 29 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 309.16 மில்லியனாக இருந்ததுடன், இதில் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 304.67 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 4.49 மில்லியன் அதாவது 1.45 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 290.18 | 286.07 | 4.11 | 1.42 |
| மூலதனம் | 18.98 | 18.60 | 0.38 | 2.00 |
| மொத்தம் | **309.16** | **304.67** | **4.49** | **1.45** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 21701 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 14.50 | 14.50 | 9.00 | 9.88 | 60.00 | 45.67 |

## 2.3 கணக்காய்வு அவதானிப்பு

நன்னடத்தை, சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் நாளதுவரையாக பேணப்படாமை

திணைக்களத்தால் நிலையான சொத்து பதிவேடு பேணப்பட்டிருந்த போதிலும் 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம், நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

**ஏனைய செலவின விடயங்களின் கீழ் செலவினங்களைச் செய்தல்**

மீண்டெழும் செலவின விடயமான 217-1-1-1301 ஆம் இலக்கத்தின் கீழ் செலவிட வேண்டிய ரூபா 198,979 கூட்டுத்தொகையான வாகன பராமரித்தல் செலவினம், மூலதன செலவின விடயமான 217-1-1-2003 இன் கீழ் (வாகன பழுதுபார்த்தலும் அபிவிருத்தி செய்தலும்) செலவிடப்பட்டிருந்தது.

### 3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நன்னடத்தை, சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தினால் சிறுவர்களின் சமூக பாதுகாப்பிற்கான திட்டங்களின் கீழ் இந்த செலவின தலைப்பிலும், மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் செலவின தலைப்பிலும் மாவட்ட செயலக அதிகாரப் பிரதேசத்தில் ஆபத்தான நிலையில் அவதியுறுகின்ற பிள்ளைகளுக்காக தயாரிக்கப்பட்ட 297 பாதுகாப்புத் திட்டங்களை அமுல்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 10.94 மில்லியன் விடுவிக்கப்பட்டிருந்தது. எனினும், ஆபத்தான நிலையில் உள்ள சிறுவர்களுக்காக தயாரிக்கப்பட்ட பாதுகாப்புத் திட்டத்தில் தேவைகள் நிறைவேற்றப்பட்டிருந்தனவா என்பதை உறுதிப்படுத்தி கொள்வதற்கு திணைக்களத்திடம் சரியான திட்டமுறைமையொன்று காணப்படவில்லை. அவ்வாறே அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருந்தமை கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை.

### 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

**வருடாந்த பெறுகைகள் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்காக விரிவானதொரு பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. செயலாற்றல்

2016 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு, செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) பிரதான நோக்கங்களுக்குரிய பணிகளிலிருந்து புறம்பாக செயற்படுதல்**

இலங்கை சமூக பின்புலத்தில் அநாதையான, கைவிடப்பட்ட மற்றும் கவனிப்பாரற்ற பிள்ளைளினதும், சட்ட ரீதியான பிரச்சனைகளுக்கு உள்ளாகிய சிறுவர்களினதும் உரிமைகள், பூரண அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் சர்வதேச நியமங்களுக்கு இணங்க கொள்கை வழங்கல், அமுல்படுத்துதல், பின்தொடர் நடவடிக்கைகள், மதிப்பீடு போன்ற செயற்பாடுகளுடன் தொடர்புபடுத்தி சர்வதேச

பொறிமுறையொன்றாக செயற்படுத்தல் திணைக்களத்தின் நோக்கமாக இருந்த போதிலும் 1956 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட திணைக்களம் 60 வருடங்கள் கடந்திருந்த போதிலும் சிறுவர்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் சர்வதேச விஞ்ஞாபனங்களுக்கு இணங்க தேசிய கொள்கையொன்றை தயாரித்தல் மற்றும் அதற்குரிய சட்ட வழங்கல்கள் என்பன 2016 ஆம் ஆண்டு வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் வீதிச் சிறுவர்களுக்கான நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு ரூபா 500,000 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது அதற்குரிய 15 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. இந்த நிதியேற்பாட்டுத் தொகை முழுமையாக செலவிடப்பட்டு மீளாய்வாண்டின் போது 05 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டமைக்கு செலவின அறிக்கை மற்றும் செயல்முன்னேற்ற அறிக்கை என்பன திணைக்களத்திற்கு கிடைத்திருக்காமையால் உரிய நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டமைக்கான எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் இறுதி வரையில் பதிவு செய்துள்ள சிறுவர் சங்கங்களின் எண்ணிக்கை 4,027 ஆகும். சிறுவர் சபைகளை தாபித்தல், காணப்படுகின்ற சிறுவர் சங்கங்களை செயற்பாடுள்ளதாக நடாத்திச் செல்லல் மற்றும் மீள் ஒழுங்கமைத்தல் என்பவற்றுக்காக ரூபா 3.4 மில்லியன் மாவட்ட செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. எனினும், சிறுவர் சங்கத்தை தொடர்ச்சியாக செயற்பாட்டு நிலையில் பராமரித்து மற்றும் இயலுமான வகையில் தயாரிக்கப்பட்ட பொருத்தமான நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தி அமுல்படுத்துவதற்காக உத்தியோகத்தர்கள் செயற்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டில் திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட்ட 11,054 சிறுவர் துஷ்பிரயோகங்களில் 7,031 முறைப்பாடுகளுக்காக மாத்திரம் முழுமையான தீர்வு வழங்கப்பட்டிருந்தது. 2,419 முறைப்பாடுகளுக்காக குறுங்கால தீர்வுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் 58 முறைப்பாடுகளுக்காக பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. 1,551 முறைப்பாடுகள் தீர்வுகளுக்காக ஏனைய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது. எனினும், அந்த பிள்ளைகளின் முறைப்பாடுகளுக்காக வழங்கப்பட்ட தீர்வுகள் தொடர்பாக திணைக்களம் பின்தொடர் நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(iv) திணைக்களத்தால் 2016 ஆம் ஆண்டில் 3 ஆராய்ச்சிகளுக்காக ரூபா 4.98 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதும் அந்த ஆராய்ச்சி அறிக்கைகளில் வழங்கப்பட்ட சிபார்சுகள் மற்றும் வழிகாட்டல்கள் என்பவற்றை அமுல்படுத்துவதற்கு போதியளவான பிரகாரம் நிகழ்ச்சித்திட்டங்கள் / செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5 மனித வள முகாமைத்துவம்

---

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

---

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 6 | 3 | 3 |
| (ii) | மூன்றாம் நிலை | 238 | 234 | 4 |
| (iii) | இரண்டாம் நிலை | 226 | 195 | 31 |
| (iv) | ஆரம்ப நிலை | 17 | 12 | 5 |
| | மொத்தம் | 487 | 444 | 43 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 43 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதில் சிரேஷ்ட நிலையில் 03 வெற்றிடங்கள் காணப்பட்டமையால் திட்டங்களை தயாரித்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் சரியான முறையில் மேற்கொள்ளப்படாமையும், இரண்டாம் நிலையில் 31 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டமையினால் திட்டத்தை அமுல்படுத்துவதில் குறைபாடுகளும் அவதானிக்கப்பட்டன.